**சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்**

அசல் வழக்கு எண்.751/2024 நாள்- 04.08.2025

**வா.சா.1-பிரபாகரன்**

**<u>வா.சா.1-ன் குறுக்குவிசாரணை பிரதிவாதி தரப்பில்</u>**

வழக்குரைக்கான தகவலை நான் தான் என் வழக்கறிஞரிடம் சொன்னேன். வழக்குரையில் குறிப்பிட்டுள்ள முகவரியில் வசித்து வருகிறேன் என்று காட்டுவதற்கு நான் ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி பூர்விகமாய் இராஜபாளையத்தை சேர்ந்த வர் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதி எந்த முகவரியில் எந்த தெருவில் குடியிருந்து வருகிறார்என்று கேட்டால் சென்னை முகவரிதான்எனக்கு தெரியும். பிரதிவாதி சென்னையில் ராம்கோ குருப்ஸ் ஐடி நிறுவனத்தில் வேலை பார்த்து வருகிறார். பிரதிவாதி எத்தனை வருடங்களாக வேலை பார்த்து வருகிறார் எ ன்று எனக்கு தெரியாது. பிரதிவாதி சென்னை வேளச்சேரியில் வீடு இருக்கும் விவரம் 10,15 வருடங்களாக எனக்கு தெரியும். பிரதிவாதி சென்னையில் அவருடைய குடும்பத்துடன் தான் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். வாசாஆ.4 ஆஸ்திரேலியா நாட்டினால் வழங்கப்பட்ட கடவுச்சீட்டு என்றால் சரிதான். ஆஸ்திரேலியா நாட்டின் குடியுரிமை பெற்றால் தான் ஆஸ்திரேலியா நாட்டின் கடவுச்சீட்டு பெறமுடியும் என்றால் சரிதான். நான் 2014 ம் ஆண்டிலிருந்து ஆஸ்திரேலியா நாட்டின் குடிமகனாக குடியுரிமை சான்று பெற்றுள்ளேன் என்றால் சரிதான். நான் தற்போது இ,ந்திய நாட்டின் குடிமகனான இல்லை என்பதாலும், 2014 ம் ஆண்டிலிருந்து ஆஸ்திரேலியா நாட்டின் குடிமகனாக குடியுரிமை பெற்றுவிட்டதால் நான் இந்தியா நாட்டின் குடிமகனாக கருதமுடியாது என்றும் அதனால் இந்திய நாட்டின் குடிமகனாக நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு அதிகார வரம்பின் காரணமாக தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

எனக்கு மனைவி குழந்தைகள் இருக்கிறார்கள். என் மனைவி மற்றும் பிள்ளைகள் அனைவரும் ஆஸ்திரேலியா நாட்டின் குடிமகன்கள் என்றால் சரிதான். பிரதிவாதியும், நானும் விஜயவாடாவில் 1991ல் இருந்து 1997ம் ஆண்டு வரை ராம்கோ நிறுவனத்தில் வேலை பார்த்து வந்ததால் எனக்கு பழக்கம். 10.02.2021ல் பிரதிவாதி ரூ.5,00,000/- கேட்ட போது நான் இராஜபாளைத்தில் தான் இருந்தேன். சென்னையில் நான் 2021ம் ஆண்டு வீடு கட்டியுள்ளேன். 2021ல் இருந்து நான் குடும்பத்துடன் ஆஸ்திரேலியா நாட்டில் தான் குடியிருந்து வருகிறோம். பிரதிவாதிக்கு கடன் கொடுத்த காசோலையை நான் இராஜபாளையத்தில் வைத்து கொடுத்தேன். பிரதிவாதிக்கு காசோலையை ஒரு டீக்கடையில் வைத்து கொடுத்தேன். அந்த டீக்கடையில் பெயர் தெரியாது. அந்த டீக்கடை சத்திரம் லாட்ஸ்க்கு அருகில் உள்ள டீக்கடையில் வைத்து கொடுத்தேன். காசோலையை கொடுக்கும் போது காலை சுமார் 11.00 மணி இருக்கும், யார் யார் இருந்தார்கள் என்று கேட்டால் நாங்கள் இரண்டு பேர் மட்டும் இருந்தோம். 10.02.2021 அன்று தான் என்னிடம் பணம் கேட்டார் நான் 12.02.2021 அன்று காசோலையை கொடுத்தேன். காசோலை கொடுத்த கிழமை எ னக்கு ஞாபகம் இல்லை. பிரதிவாதி சென்னையில் இருந்து காசோலையை வாங்குவதற்காக வந்தாரா என்று கேட்டால் பிரதிவாதி இராஜபாளையம் வந்த இடத்தில் என்னிடம் கடன் கேட்டார். பிரதிவாதி சென்னையில்இருந்து வந்து என்னிடம் கடன் கேட்ட தேதி 10.2.2021 அந்த தேதியில் பிரதிவாதி இராஜபாளையத்தில் எங்கு குடியிருந்தார் என்று எனக்கு தெரியாது. பிரதிவாதியின் பூர்விக வீடு இராஜபாளையத்தில் இருக்கிறது என்று எனக்கு தெரியும் ஆனால் எங்கு இருக்கிறது என்று எனக்கு தெரியாது. நானும், பிரதிவாதியும் 10 வருடங்களுக்கு மேலாக நன்கு பழக்கம் உள்ள நபர்களாக இருக்கிறோம் என்று கூறியதால் பிரதிவாதி அந்த சமயத்தில் எங்கு குடியிருந்தார் என்று எனக்கு நன்கு தெரிந்திருக்கும் என்றால் சரியல்ல. பிரதிவாதி காசோலையை வசூலுக்கு சென்னை உள்ள

அவரது வங்கி கணக்கில் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அதற்காக பிரதிவாதி எனக்கு அனுப்பிய வாட்ஸ்அப் குறுஞ்செய்தி என் வசம் தான் இருக்கிறது. நீதிமன்றம் உத்தரவிடும்பட்சத்தில் அதை தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன். வாட்ஸ்அப் குறுஞ்செய்தி தாக்கல் செய்தால் உண்மை தெரிந்துவிடும் என்பதால் தான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு அறிவிப்பு அனுப்பிய 18.02.2023 அன்று நான் இராஜபாளையத்தில் தான் இருந்தேன். அன்றைய தினம் மதுரை விமான நிலையத்தில் இருந்து வெளிநாடு கிளம்பிவிட்டேன் என்றால் சரிதான். எனக்கு விமானம் காலையா, மாலையா என்று ஞாபகம் இல்லை. வா.சா.ஆ.2 ல் நான் கையொப்பம் செய்துள்ளேன். வாசாஆ.4 என்னால் உற்பத்தி செய்யப்பட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதன் உண்மைத்தன்மையை நான்தான் நிருபிக்ககடமைப்பட்டுள்ளவன் என்றால் சரியல்ல. கடன் தொகையை நான் எப்போதெல்லாம் இந்தியாவிற்கு வருகிறேனோ அப்போதெல்லாம் பிரதிவாதியை சந்தித்து கேட்டுள்ளேன். கடன் தொகையை நான் பிரதிவாதியிடம் வேறு நபர்கள் மூலமாக கேட்கவில்லை. 18.02.2023 அன்று வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய பின்பு ஒரு வருடமாக வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் 2023 ம் வருட கடைசியில் வந்தவுடன் வழக்கு தாக்கல் செய்தேன். அறிவிப்பு அனுப்பிய பிறகு பிரதிவாதி அவரது நண்பர் செந்தில் என்பவர் மூலமாக சமரசம் பேசினாரா என்று கேட்டால் இல்லை. 2020 ம் வருடம் நான் வீடு கட்டும் போது எனக்கு பணக்கஷ்டம் இருந்தது என்றும், அதற்காக நான் பிரதிவாதியிடம் ரூ5,00,000/- கடனாக பெற்றிருந்தேன் எனறும், பிரதிவாதியிடம் பெற்ற கடனை திருப்பி செலுத்துவதற்காக வேண்டி தான் வழக்கில் சொல்லப்பட்டுள்ள காசோலையை நான் வழங்கினேன் என்றும், பிரதிவாதி என்னிடம் கடன் பெற்றதில்லை என்றும், பிரதிவாதியை நான் சந்திக்கவில்லை என்றும், சொன்னால் சரியல்ல. பிரதிவாதி சென்னையில் இருக்கும்

வீடு பிரதிவாதியின் சொந்த வீடு என்றால் பிரதிவாதியின் மனைவி பெயரில் உள்ளது. பிரதிவாதி ராம்கோ குருப் நிறுவனத்தில் தற்போது உடல் நிலை சரியில்லாததால் வேலை பார்க்கவில்லை என்று நான் தெரிந்து கொண்டேன். பிரதிவாதி என்னிடம் கடன் வாங்கியது போன்று வேறு யாரிடம் கடன் வாங்கியுள்ளார்கள் என்று பெயர் மற்றும் முகவரி எனக்கு தெரியாது. பிரதிவாதியின் பெயருக்கு கலங்கம் ஏற்படுத்தவேண்டும் என்பதற்காக பொய்யான சங்கதிகளை குறிப்பிட்டு இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தற்போது இந்திய குடிமகன் இல்லை என்றும், அதனால் இந்த வழக்கை விசாரிக்க இந்த நீதிமன்றத்திற்கு அதிகார வரம்பு இல்லை என்றால் சரியல்ல.

| |
|---|
| சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.<br><br>சார்பு நீதிபதி,<br>இராஜபாளையம். |